## தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் அவமதித்து அத்துமீறும்

# ஆளுநரைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம்!



ஆளுநர் ஆர்.என் ரவியைக் கண்டித்து, தலைமைக் கழக அறிவிப்பின்படி நீலகிரி மாவட்டம் உதகையில் மாவட்ட தி.மு.க. செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், தமிழ்நாட்டையும், தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமதிக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவியைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி., உரையாற்றி னார். உடன் கழக மருத்துவர் அணி துணைத் தலைவர்டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி. கோ.கண்ணன், ஆர்.ராஜ சேகர், இரா.ஸ்ரீதரன், ஆர்.சிவானந்தம், ஆர்.வேல்முருகன், கே.வி.ராஜ்குமார். எஸ்.பன்னீர் செல்லம், டி.எ.தட்சணாமூர்த்தி, ந.பாண்டுரங்கன், பிரியா விஜயாங்கன். கலோகநாதன், விஜயலட்சுமிரமேஷ், ஜெயராணிரவி, க.சௌந்தரராசன், ப.கார்த்திவேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்தும், ஒன்றிய அரசின் ஏஜெண்ட்டாக தமிழ்நாட்டின் உரிமைகளில் அத்துமீறல் களைச் செய்யும் ஆளுநரைக் காப்பாற்றிடவும், ஒன்றிய அரசின் மீதுள்ள தமிழ்நாட்டு மக்களின் கோபத்தை திசைமாற்றவும் வித்தைகளைச் செய்யும் அ.தி.மு.க., பா.ஜ.க. கள்ளக் கூட்டணியைக் கண்டித்து திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் தாராபுரம் அண்ணா சிலை முன்பு மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார் தலைமையில் நகர செயலாளர் எஸ்.முருகானந்தம் வரவேற்புரையில் நடைபெற்றது. இதில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், தமிழ்நாடு சட்டமன்றத்தில் தேசிய கீதத்தையும், தமிழக மக்களையும் அவமதிப்பு செய்யும் வகையில் வெளிநடப்பு செய்த ஆளுநர் ஆர்.என்.ரவி யைக் கண்டித்து புதிய பேருந்து நிலையத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வீ.ஜெகதீசன் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஆளுநர் ஆர்.என்.ரவியைக் கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டது. மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், எஸ்.அண்ணாதுரை, பட்டுச் செல்வி ராஜேந்திரன், அழகு.நீலமேகம், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,நூருல்ஹிதா இஸ்மாயில், சன். சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், முன்னாள் பெருந்தலைவர்கள் க.ராமலிங்கம், பிரபா செல்லப்பிள்ளை, முன்னாள் துணை பெருந்தலைவர் எம்.ரெங்கராஜ், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.வேணு கோபால், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ) ஹரிபாஸ்கர் உள்ளிட்ட 2000 பேர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டையும், தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப் படுத்தி வரும் ஆளுநரைக் கண்டித்து மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் ஏற்பாட்டில் மயிலாடுதுறையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், மாநில நிர்வாகிகள் குத்தாலம் க.அன்பழகன், ஜெக.வீரப்பாண்டியன், ஆர்.அருள்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, இரா. இளங்கோவன், முத்து.மகேந்திரன், மாவட்டக் கழக நிர்வாகிகள் கே.ஜி.சீனிவாசன், மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகி பன்னீர், மகா.அலெக்சாண்டர், மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ் மற்றும் பலர் உள்ளனர்.



ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. சார்பில் காந்திபுரம், டாடாபாத், பவர் ஹவுஸ் அருகில், மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக் தலைமையில் ஆளுநரின் அநாகரீகத்தைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வடக்கு மாவட்டச் செயலாளர் தொஅ.ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் முன்னிலையில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், கழக சொத்துப் பாதுகாப்பு குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி,கோவை மாநகர் மாவட்ட, வடக்கு மாவட்ட, தெற்கு மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்தும், ஒன்றிய அரசின் ஏஜென்ட்டாக தமிழ்நாட்டின் உரிமைகளில் அத்துமீறல்களைச் செய்யும் ஆளுநரைக் காப்பாற்றிடவும், ஒன்றிய அரசின் மீதுள்ள தமிழ்நாட்டு மக்களின் கோபத்தை திசைமாற்றவும் வித்தைகளைச் செய்யும் அ.தி.மு.க., பா.ஜ.க. கள்ளக் கூட்டணியைக் கண்டித்தும் புதுக்கோட்டை வடக்கு,தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 07.01.2025 காலை 10 மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டம் புதுக்கோட்டை திலகர் திடலில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வுகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் 5000 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டில் அத்துமீறும் ஆளுநரையும் அவரைக் காப்பாற்றும் அ.தி.மு.க. பாஜக கள்ளக் கூட்டணியையும் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் ரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா சிலை முன்பு மாவட்ட அவைத்தலைவர் க.நடராசன் தலைமையில் மாநகர கழக செயலாளர்கள் டி.கே.டி மு.நாகராசன், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ் நாட்டையும், தமிழ்த்தாய் வாழ்த்தையும், சட்டமன்ற மரபுகளையும் தொடர்ந்து அவமானப் படுத்தும் ஆளுநர் ரவியைக் கண்டித்து ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் கலந்து கொண்டார்.



தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி பதவி விலகக் கோரி ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.